# பழனி நகராட்சி

## தினசரி சந்தை

பழனி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை காந்தி சாலை மற்றும் பெரியப்பா நகர் இட்டேரி சாலையில் செயல்பட்டு வருகிறது. காந்தி தினசரி சந்தையில் கீழ்க்கண்ட விபரப்படி 284 கடைகள் உள்ளது.

A பிளாக் - 121 கடைகள்

B பிளாக் - 106 கடைகள்

C பிளாக் - 57 கடைகள்

------------

மொத்தம் **- 284** கடைகள்

------------

காந்தி தினசரி சந்தையின் வெளிப்புறப் பகுதியில் காந்தி சாலையில் கூடுதலாக 15 நகராட்சி கடைகள் நகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

காந்தி தினசரி சந்தையில் செயல்பட்டு வரும் மளிகை மற்றும் காய்கறிக் கடைகளில் பழனி நகரைச் சுற்றியுள்ள கிராமம் மற்றும் பழனி நகர மக்கள் பெருமளவிற்கு வந்து பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

இட்டேரி சாலை, பெரியப்பா நகர் சந்தையில் 31 கடைகள் செயல்பட்டு வருகிறது. இட்டேரி சாலை சந்தையில் பெறப்படும் காய்கறிகள் உள்ளூர் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு நகரங்கள் மற்றும் வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

காந்தி தினசரி சந்தை மற்றும் பெரியப்பா நகர் தினசரி சந்தை பழநி நகரில் முக்கிய வணிக மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த இரண்டு சந்தைகளில் இருந்தும் பெறப்படும் தொகையானது நகராட்சிக்கு முக்கிய வருவாயாகும்.